**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**

(பதிவு எண். 158/CPT - அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)

E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005.
போன் : 2854 8529
2851 5038
பேக்ஸ் : 2851 6574

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **K. விஜயன்** | **S.S. சுப்பிரமணியன்** | **E. அந்தோணி** |


நாள்: **20.11.2014**

**பெறுநர்**

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,

144, அண்ணாசாலை,

சென்னை 600 002.

ஐயா,

பொருள் : **நிர்வாகம் திருவண்ணாமலை மின் விநியோக வட்டம், திரு எம். பாலாஜி, மின்பாதை ஆய்வாளர் - பழிவாங்கலை ஏற்று பணியேற்பு - சம்மந்தமாக.**

திருவண்ணாமலை மின் விநியோக வட்டத்தில் பணியாற்றும் திரு எம். பாலாஜி கம்பியாளர் அவர்களுக்கு சில நாட்களுக்கு பின்னால் வரும் பதவி உயர்வை பழிவாங்கும் நோக்கத்தோடு மின்பாதை ஆய்வாளராக பதவி உயர்வு அளித்து அவர் பணியாற்றும் திருவண்ணாமலை கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யாமல், 100 கி.மீ. அப்பால் உள்ள செய்யார் கோட்டத்திற்கு ஒதுக்கீடு, மறு ஒதுக்கீடு பணி விடுவிப்பு அனைத்தும் அவசர கதியில் செய்யப்பட்டது.

வாரிய விதிகளுக்கு மாறாக அதிகார அத்துமீறலை பயன்படுத்தி திரு எம். பாலாஜி, மின்பாதை ஆய்வாளர் அவர்களுக்கு 6.2014 இழைக்கப்பட்ட அநீதியை களைந்து நியாயம் வழங்க வேண்டுமென மேற்பார்வைபொறியாளர், திருவண்ணாமலை, தலைமை பொறியாளர், விழும்புரம், தலைமை பொறியாளர் / பணியமைப்பு, இயக்குநர் / விநியோகம், இவைகளுக்கெல்லாம் மேலாக **தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்**, அவர்களிடம் மின் ஊழியர் மத்திய அமைப்பு முறையிட அவர்களும் அதிகார அத்துமீறலை களைந்து நியாயம் வழங்க முயற்சித்தனர்.

பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்ட திரு எம். பாலாஜி 6-2014 இல் நிர்பந்தமாக பணிவிடுப்பு செய்த காரணத்தால் தொடர்ந்து விடுப்பில் செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். அவருக்கு இழைக்குப்பட்ட அநீதியை களைவதற்கு காலதாமதம் ஏற்பட்டதனால் மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் மின் வாரிய உயர் அதிகாரிகளின் ஆலோசனையோடு 24.10.2014 அன்று மேற்பார்வை பொறியாளர், திருவண்ணாமலை அவர்களை சந்தித்து அநீதியை களைந்து நியாயம் வழங்க ஏற்பட்டுள்ள கால தாமத்தை தவிர்க்க வேண்டுமென அழுத்தமாக வலியுறுத்தினோம்.

வாரிய தலைவர் இயக்குநர், விநியோகம், தலைமை பொறியாளர் / பணியமைப்பு அவர்களின் நியாயமான வழிகாட்டுதலின் அடிப்படையில் மாண்புமிகு ஸ்தல அமைச்சர் அவர்களுடைய ஒப்புதலையும் பெற்று, 26.10.2014 அன்று பாதிக்கப்பட்ட திரு எம். பாலாஜி மின் பாதை ஆய்வாளர் அவர்களின் செய்யாறு கோட்ட ஒதுக்கீட்டை திரும்ப பெற்று மீண்டும் திருவண்ணாமலை கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யும் உத்தரவை 26.10.2014 இல் வழங்கி நியாயத்தை நிலை நாட்டினார்கள்.

திரு எம். பாலாஜி அவர்களும் 27.10.2014 அன்று திருவண்ணாமலை கோட்டத்தில் பணியேற்று, பணியாற்ற பின்பு, 29.10.2014 அன்று திரும்பவும் திருவண்ணாமலை கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்த உத்தரவை எந்த வித முகாந்திரமும் இன்றி ரத்து செய்து திரும்பவும் செய்யாறு கோட்டத்திற்கு மறு ஒதுக்கீடு செய்யும் அநியாயம் அரங்கேறியது.

திரு எம். பாலாஜி மின்பாதை ஆய்வாளர் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி களைந்தது என்று இருந்த போது, திரும்பவும் இந்த அநியாயம் அரங்கேறியதை கண்டு மின் ஊழியர் மத்திய அமைப்பு அதிர்ச்சிக்குள்ளனது. திரு. எம். பாலாஜிக்கு விளைவிக்கப்பட்ட அநீதியை களைய வேண்டி வாரிய அதிகாரிகளோடு தொடர்ந்து முயற்சித்து வருகின்றோம். மதிப்பிற்குரிய வாரிய தலைவர் அவர்களும் இந்த சிறு பிரச்சனையில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது. இழைக்கப்பட்ட அநீதியை களைய தொடர்ந்து முயற்சித்து வருகின்றீர்கள். அதற்கு எங்கள் அமைப்பின் சார்பாக மிக்க நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இருப்பினும் பாதிக்கப்பட்ட திரு எம். பாலாஜி நான்கு மாதங்களுக்கு மேல் விடுப்பிலும் அதனால் பல இன்னல்களையும் அனுபவித்து வருகின்ற நிலையில் இனியும் காலதாமதம் செய்வது பொருளாதார ரீதியாக பல இன்னல்களை உருவாக்குகிறது.

இந்நிலையில் பழிவாங்கலும், அதிகார அத்துமீறலையும் ஏற்று வாரிய விதிகளுக்கு முரணாக செய்யாறு கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்ததை ஏற்று பணியேற்பு எதிர்வரும் சனிக்கிழமை 22.11.2014 க்கு பின்னர் 24.11.2014 இல் பணியேற்பது என்றும் முடிவு செய்துள்ளோம்.

இப்பிரச்சனையில் அநியாயமும், அத்துமீறலும் தற்காலிக வெற்றியை பெற்றுள்ளது. நியாயம் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிடுவதோடு நியாயம் வழங்க தாங்களும், வாரிய அதிகாரிகளும் எடுத்த முயற்சிக்கு எங்களது அமைப்பு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இனி மேலாவது அதிகார அத்துமீறலும், வாரிய விதிகளுக்கு புறம்பான செயல்களும் நடைபெறாமல் இருக்க நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

**நகல் :**

இயக்குநர் / விநியோகம்
தலைமை பொறியாளர் / பணியமைப்பு
தலைமை பொறியாளர் / விழுப்புரம் மண்டலம்
மேற்பார்வை பொறியாளர் / திருவண்ணாமலை வட்டம்